செ.வெ.எண்.20 நாள்: 08.02.2021

**நீலகிரி மாவட்டத்தில் 13.02.2021 அன்று வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் உதகை அரசினர் கலைக்கல்லூரி இணைந்து நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி முகாம் வருகின்ற **13.02.2021** (சனிக்கிழமை) அன்று உதகை அரசினர் கலைக்கல்லூரியில் நடைப்பெற உள்ளது.

இம்முகாம் காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைப்பெறும். இம்முகாமில் 10ம் வகுப்பு முதல் பட்ட படிப்பு வரை படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம். இந்த தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 30க்கும் மேற்பட்ட வேலையளிப்பவர்கள் மற்றும் திறன் பயிற்சி அளிப்பவர்கள் கலந்து கொண்டு, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை தனியார் வேலைக்கும் மற்றும் திறன் பயிற்சிக்கும் தேர்ந்தெடுக்க உள்ளனர்.

மேலும் இந்த தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்படும் நபர்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்பட மாட்டாது. உரிய காலத்தில் புதுப்பித்து வந்தால் அரசு வேலைவாய்ப்பினையும் பெற்றுக் கொள்ளலாம். தகுதியும் விருப்பமும் இருப்பின் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையும் பெற்று பயனடையலாம். இவ்வேலைவாய்ப்பு முகாமில் அயல் நாட்டு வேலைக்கு விண்ணப்பிக்கும் முகாம் பதிவு மற்றும் திறன் பயிற்சிக்கும் பதிவு மேற்கொள்ளப்படும். இவ்வேலைவாய்ப்பு முகாம் முற்றிலும் இலவசம் எனவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் வேலைநாடுநர்களும், வேலையளிப்போரும் தனியார்துறை வேலை இணையதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், உதகை தொலைபேசி எண் 0423-2444004 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் அலுவலகம், நீலகிரி மாவட்டம்.